A consumer is the important visitor on our premises.
He is not dependent on us. We are dependent on him.
-Mahatma Gandhi

# TAMIL NADU ELECTRICITY OMBUDSMAN


4th Floor, SIDCO Corporate Office Building,Thiru-vi-ka Industrial Estate,
Guindy, Chennai – 600 032.
Phone : ++91-044-2953 5806, 044-2953 5816 Fax : ++91-044-2953 5893
Email :tneochennai@gmail.com Web site : www.tnerc.gov.in


**முன்னிலை: திரு. ந. கண்ணன், மின்குறைதீர்ப்பாளர்**

**மேல்முறையீட்டு மனு எண் 22 / 2024**

திரு P. சாம் ஜெய சிங்,
63E/3A1, பெருமாள் நகர், A.R.P. கேம்ப் ரோடு,
பட்டகசாலியன்விளை, நாகர்கோவில் – 629 002,
கன்னியாகுமரி மாவட்டம்.

………மேல்முறையீட்டாளர்
(திரு P. சாம் ஜெய சிங்)

எதிர்

1. உதவி மின்பொறியாளர்/ பார்வதிபுரம்,
கன்னியாகுமரி மின் பகிர்மான வட்டம்,
தமிழ்நாடு மின் உற்பத்தி மற்றும் பகிர்மான கழகம்,
துணை மின் வளாகம், பார்வதிபுரம், நாகர்கோவில் – 629 003.

2. செயற்பொறியாளர்/ விநியோகம் / நாகர்கோவில்,
கன்னியாகுமரி மின் பகிர்மான வட்டம்,
தமிழ்நாடு மின் உற்பத்தி மற்றும் பகிர்மான கழகம்,
பார்வதிபுரம், நாகர்கோவில் – 629 003.

. . . எதிர்மனுதாரர்கள்
(திரு M. ரமணிபாய், உதவி மின்பொறியாளர்/ பார்வதிபுரம், (i/c)
திரு N.K. ஜவஹர் முத்து, செயற்பொறியாளர்/ விநியோகம் / நாகர்கோவில்)

**மனு பெறப்பட்ட நாள்: 08-04-2024**

**கேட்புரை நாள்: 28-05-2024**

**ஆணை நாள்: 31-05-2024**

08.04.2024 அன்று பெறப்பட்ட திரு P. சாம் ஜெய சிங், 63E/3A1, பெருமாள் நகர், A.R.P. கேம்ப் ரோடு, பட்டகசாலியன்விளை, நாகர்கோவில் – 629 002 கன்னியாகுமரி மாவட்டம் அவர்களின் மனு மேல்முறையீட்டு மனு எண் 22/2024 ஆக பதிவு செய்யப்பட்டுள்ளது. மேற்கண்ட மனுவின் மீது மின்குறைதீர்ப்பாளரின் கேட்புரை 28.05.2024 அன்று நடைபெற்றது. மேல்முறையீட்டாளரின் மனுவிலுள்ள வாதங்கள்,

எதிர்மனுதாரரின் பதிலுரையிலுள்ள வாதங்கள் மற்றும் இருதரப்பினராலும் கேட்புரை நாளில் எடுத்துரைக்கப்பட்ட வாதங்கள் ஆகிய அனைத்தையும் ஆராய்ந்து மின்குறைதீர்ப்பாளரால் கீழ்கண்ட ஆணை வழங்கப்படுகிறது.

## ஆணை

### 1. மேல்முறையீட்டாளரின் கோரிக்கை:

மேல்முறையீட்டாளரின் நிலத்தின் எல்லைக்குள் நிற்கும் மின்கம்பத்தையும் மின்மாற்றியையும் வேறு இடத்திற்கு மாற்றி தருமாறு மேல்முறையீட்டாளர் விண்ணப்பித்துள்ளார்.

### 2.0 வழக்கின் சுருக்கம்:

2.1 தனது நிலத்தின் உட்பகுதியில் நிறுவப்பட்டுள்ள மின்மாற்றியை நிலத்திற்கு வெளியே மாற்றம் செய்யுமாறு மேல்முறையீட்டாளர் விண்ணப்பித்துள்ளார்.

2.2 மின்மாற்றி மற்றும் மின்கம்பம் சாலையின் ஓரத்தில் பொது இடத்தில் மேல்முறையீட்டாளருக்கோ மற்றும் பொதுமக்களுக்கோ இடையூறு இல்லாதவாறு காந்தி நகர் பகுதியில் உள்ள மின் குறைபாட்டினை சரிசெய்ய பொதமக்களின் வேண்டுகோளுக்கிணங்க நிறுவப்பட்டதாக எதிர்மனுதாரர் தெரிவித்துள்ளார்.

2.3 தனது நிலத்தின் உள்ளே நிறுவப்பட்ட மின்கம்பத்தை அகற்றி தருமாறு மேல்முறையீட்டாளர் கன்னியாகுமரி மின்பகிர்மான வட்டம், மின் நுகர்வோர் குறைதீர்க்கும் மன்றத்தை 17.12.2023 அன்று அணுகியுள்ளார்.

2.4 மின் நுகர்வோர் குறைதீர்க்கும் மன்றம், கன்னியாகுமரி மின்பகிர்மான வட்டம் 23.02.2024 அன்று தன்னுடைய ஆணையை அளித்துள்ளது. மன்றம் அளித்த தீர்ப்பில் அதிருப்தியுற்றதால் இந்த மேல்முறையீட்டு மனுவினை மேல்முறையீட்டாளர் மின்குறைதீர்ப்பாளரிடத்தில் சமர்ப்பித்துள்ளார்.

### 3.0 மன்றத்தின் தீர்வு :

3.1 கன்னியாகுமரி மின்பகிர்மான வட்டம், மின்நுகர்வோர் குறைதீர்க்கும் மன்றம் தன்னுடைய தீர்வை 23.02.2024 நாளிட்ட ஆணையில் தெரிவித்துள்ளது. அந்த ஆணையின் சம்பந்தப்பட்ட பத்தி கீழே கொடுக்கப்பட்டுள்ளது.

*"மன்றத்தின் தீர்வு:*
*மனுதாரர் புகாரில் குறிப்பிட்டுள்ள இடத்தில் மின் உரிமையாளர் மனுதாரரின் கோரிக்கையை ஏற்று மின்உபகரணம் மற்றும் மின்பாதையில் மாற்றங்கள் செய்துள்ளபடியால் இம்மனு முற்றாக்கம் செய்யப்படுகிறது."*

**4.0 <u>மின்குறைதீர்ப்பாளரின் கேட்புரை</u>:**

4.1 மேல்முறையீட்டாளரும் எதிர்மனுதாரரும் தங்களது தரப்பு வாதங்களை எடுத்துரைப்பதற்கு வசதியாக 28.05.2024 அன்று காணொலி மூலம் கேட்புரை நடத்தப்பட்டது.

4.2 மேல்முறையீட்டாளர் திரு P. சாம் ஜெய சிங் அவர்கள் கேட்புரை நாளில் கலந்து கொண்டு தன்னுடைய வாதத்தை எடுத்துரைத்தார்.

4.3 எதிர்மனுதாரர்கள் திரு M. ரமணிபாய், உதவி மின்பொறியாளர்/ பார்வதிபுரம், (i/c) மற்றும் திரு N.K. ஜவஹர் முத்து, செயற்பொறியாளர்/ விநியோகம் / நாகர்கோவில், கன்னியாகுமரி மின் பகிர்மான வட்டம் ஆகியோர் கேட்புரை நாளில் கலந்து கொண்டு தங்களுடைய வாதங்களை எடுத்துரைத்தனர்.

4.4 மின்குறைதீர்ப்பாளரின் முன்பு சமர்ப்பிக்கப்படும் மனு மேல்முறையீட்டு மனு என்பதால் மின்குறைதீர்மன்றத்தில் மனுதாரரால் வைக்கப்பட்ட கோரிக்கைகள் சம்பந்தப்பட்ட வாதங்கள் மட்டுமே தீர்விற்கு எடுத்துக் கொள்ளப்படுகிறது. குறைதீர் மன்றத்தின் நடவடிக்கைகள், குறைதீர் மன்றத்தில் சமர்ப்பிக்கப்படாத புதிய நிவாரணங்கள் அல்லது பணியாளர் ஒழுங்கு நடவடிக்கை சம்பந்தப்பட்ட கோரிக்கைகள் முதலியன மின்நுகர்வோர் குறைதீர்க்கும் மன்றம் மற்றும் மின்குறைதீர்ப்பாளருக்கான ஒழுங்குமுறை விதிகளின்படி மின்குறைதீர்ப்பாளரின் தீர்விற்கு எடுத்துக் கொள்ளப்படவில்லை.

**5.0 <u>மேல்முறையீட்டாளரின் வாதங்கள்</u>:**

5.1 மின்மாற்றி மற்றும் மின்கம்பம் சாலையின் ஓரத்தில் யாருக்கும் இடையூறு இல்லாதவாறு 02.08.2023 அன்று நிறுவப்பட்டுள்ளதாகவும் அச்சமயத்தில் எந்தவிதமான எதிர்ப்பும், கடிதம் வாயிலாகவோ, நேரடியாகவோ பெறப்படவில்லை என மன்ற ஆணையில் குறிப்பிட்டுள்ளதாகவும், மேற்படி மின் மாற்றி மற்றும் மின்கம்பம் தனது உரிமைப்பட்ட நிலத்திற்குள் நிறுவப்படுவது குறித்து தான் ஏதும் ஆட்சேபம்

தெரிவிக்கவில்லை என்பது அபத்தமான வாதம் என மேல்முறையீட்டாளர் தெரிவித்துள்ளார்.

5.2 மேற்படி செயல்களுக்காக தன்னிடம், தனக்கு உரிமைப்பட்ட நிலத்தில் வேலை செய்ய எவ்வித அறிவிப்போ, முன் அனுமதியோ பெறப்படாத நிலையில் தான் ஆட்சேபம் தெரிவிப்பதென்பது சாத்தியமில்லாத ஒன்றாகும் என மேல்முறையீட்டாளர் தெரிவித்துள்ளார்.

5.3 மின்மாற்றி மேற்கண்ட நிலத்தின் உள்ளே வராதவாறு மாற்றியமைக்கப்பட்டுள்ளதாக மன்ற ஆணையில் குறிப்பிட்டுள்ளதாகவும், மேற்கண்ட மின்மாற்றி, மேற்கண்ட நிலத்தின் உள்ளே வராதவாறு மாற்றியமைக்கப்பட்டுள்ளது என குறிக்கப்பட்டுள்ளது தவறு எனவும், மின் மாற்றி மாற்றியமைக்கப்படவில்லை எனவும், அதே இடத்தில் தான் உள்ளதாகவும், மின் மாற்றியில் சுமார் ஒரு அடி (One Foot) பகுதி தன் நிலத்தின் மேல் தான் உள்ளதாகவும் மேல்முறையீட்டாளர் தெரிவித்துள்ளார்.

5.4 இடத்தின் மூன்று பக்கம் முகப்பு உள்ளதாக மன்ற ஆணையில் குறிப்பிட்டுள்ளதாகவும், மூன்று பக்கம் முகப்பு கிடையாது என்றும் வடக்கு பக்கமும், மேற்கு பக்கமும் வேறு ஆட்களின் நிலங்கள் உள்ளதாகவும் மேல்முறையீட்டாளர் தெரிவித்துள்ளார்.

5.5 தன் நிலத்தின் எல்லைக்குள் எந்த மின்கம்பமோ மின் மாற்றி மற்றும் ஸ்டே கம்பி நிறுவப்பட்டதற்கான ஆதாரங்கள் மன்றத்தில் தாக்கல் செய்யவில்லை என மன்ற ஆணையில் குறிப்பிட்டுள்ளதாகவும், தனது நிலத்தில் மேற்படி மின் மாற்றி மற்றும் கம்பங்கள், ஸ்டே கம்பி ஆகியன நிறுவப்பட்டதற்கு எவ்வித ஆதாரங்களும் சமர்ப்பிக்கவில்லை என்பது தவறான கருத்து எனவும், கடந்த 20.01.2024 அன்று நடந்த கூட்டத்தில் தனது மனைவி இதற்கான புகைப்பட ஆதாரங்கள் சமர்ப்பிக்க தயாராக இருந்த போதும் அவைகளை எவரும் பார்வையிட முன்வரவில்லை என மேல்முறையீட்டாளர் தெரிவித்துள்ளார்.

5.6 15 தினங்களுக்குள் மனுதாரரின் நிலத்திற்குரிய எல்லைகளை நிர்ணயம் செய்து மின்உரிமையாளரிடம் தகவல் தெரிவிக்கும்படி கேட்டுக் கொள்ளப்பட்டதாக மன்ற ஆணையில் குறிப்பிட்டுள்ளதாகவும், 15 தினங்களுக்குள் மனுதாரரின் நிலத்திற்குரிய

எல்லைகளை நிர்ணயம் செய்ய சொல்லவில்லை என்றும் அப்படி எவ்வித காலவரையும் தனக்கு சொல்லப்படவில்லை என்றும், மனுதாரர் ஆகிய தான் வேலையில் இருந்து வந்தபின் எல்லைகளை நிர்ணயம் செய்யச் சொல்லப்பட்டதாகவும், அதே போல் வேலையில் இருந்து வந்த உடன் எல்லைகளை நிர்ணயம் செய்துள்ளதாகவும் மேல்முறையீட்டாளர் தெரிவித்துள்ளார்.

5.7 மின் மாற்றியை ON/OFF செய்யும் Lever–ம் தன் நிலத்தினுள் தான் உள்ளதாகவும், இது Compound சுவர் கட்டத் தடையாக உள்ளதாகவும், Compound சுவர் கட்டினால் பிறகு மின் மாற்றியை ON/OFF செய்ய முடியாது எனவும், எனவே தனது புகார் மனுவில் குறிப்பிட்டுள்ள குறைகளை நிரந்தரமாக நிவர்த்தி செய்து தருமாறு மேல்முறையீட்டாளர் கேட்டுக் கொண்டுள்ளார்.

## 6.0 <u>எதிர்மனுதாரரின் வாதங்கள்</u>:

6.1 திரு.P. சாம் ஜெயசிங், நாகர்கோவில் அவர்கள் புகார் மனுவில் குறிப்பிட்டுள்ள 25 KVA மின்மாற்றி single pole structure மின்கம்பம் சாலையின் ஓரத்தில் பொது இடத்தில் அன்னாருக்கோ மற்றும் பொதுமக்களுக்கோ இடையூறு இல்லாதவாறு காந்தி நகர் பகுதியில் உள்ள மின் குறைபாட்டினை சரிசெய்ய பொதுமக்களின் வேண்டுகோளுக்கிணங்க 02.08.2023 அன்று நிறுவப்பட்டதாகவும், மின்மாற்றி மற்றும் மின்கம்பங்கள் நிறுவும் பொழுது எந்த வித ஆட்சேபனையும் திரு.P. சாம் ஜெயசிங் அவர்களிடமிருந்து பெறப்படவில்லை என்றும், திரு.P. சாம் ஜெயசிங் அவர்கள் 17.12.2023 அன்று மின்நுகர்வோர் குறைதீர்க்கும் மறைத்தில் அளித்த புகாரின் அடிப்படையில் கள ஆய்வு செய்யப்பட்டு அவருடைய இடத்தின் வெளியே சாலை ஓரத்தில் ஊன்றப்பட்ட மின்கம்பங்களை அன்னாருக்கு இடையூறு இல்லாதவாறு மாற்றி அமைக்கப்பட்டதாகவும், ஏற்கனவே அவருடைய நிலத்திற்கு வெளியே ஒரு LT stud pole பல வருடங்களுக்கு முன் நிறுவப்பட்டதாகவும் மாற்றியமைக்கப்பட்டதாகவும், எதிர்மனுதாரர் தெரிவித்துள்ளார்.

6.2 புதிதாக நிறுவப்பட்ட மின்மாற்றியின் கொள்கலன் அவருடைய இடத்திற்கு உள்ளே வராதவாறு சற்று திருப்பி வைக்கப்பட்டதாகவும், இந்த மின்மாற்றி ஏற்கனவே புகார்தாரரின் இடத்தின் அருகே தெற்கு பக்கமாக சென்ற தாழ்வழுத்த மின்பாதையை

உயர் அழுத்த மின்பாதையாக மாற்றி நிறுவப்பட்டதாகவும், மின் மாற்றி மனுதாரரின் இடத்தின் உள்ளே அமைக்கப்படவில்லை என்றும், பொது பாதையில் சாலையின் அருகே அமைக்கப்பட்டுள்ளதாகவும் எதிர்மனுதாரர் தெரிவித்துள்ளார்.

6.3 மேற்படி மின்மாற்றி மற்றும் மின்கம்பம் புகார்தாரருக்கு உரிமைப்பட்ட நிலத்திற்குள் நிறுவப்படவில்லை என்றும் மின்மாற்றி மற்றும் மின்கம்பம் நிறுவும் பொழுது அன்னாரின் நிலத்தின் எல்லை எதுவும் குறிப்பிடப்படவில்லை எனவும், மேலும் பொது இடத்தில் பொதுமக்களின் நலனுக்காக மின்மாற்றி அமைப்பதற்கு முன் அனுமதி வாங்க தேவையில்லை என்றும் எதிர்மனுதாரர் தெரிவித்துள்ளார்.

6.4 மேற்கண்ட மின்மாற்றி மேற்கண்ட நிலத்தின் உள்ளே வராதவாறு மாற்றியமைக்கப்பட்டுள்ளது என குறிக்கப்பட்டுள்ளது தவறாகும் என்றும், மின்மாற்றி மாற்றியமைக்கப்படவில்லை அதே இடத்தில் தான் உள்ளது என்றும் மின்மாற்றியில் சுமார் ஒரு அடி (one Feet) பகுதி தன் நிலத்தின் மேல்தான் உள்ளது எனவும், திரு.P. சாம் ஜெயசில் அவர்களின் மின்நுகர்வோர் மன்றத்தில் பெறப்பட்ட புகாரின் அடிப்படையில் அவருடைய இடத்திற்கு வெளியே நிறுவப்பட்ட 9.14 மீட்டர் மின்கம்பம் மற்றும் 800 மீட்டர் (stud) தாங்குமின்கம்பம் மாற்றியமைக்கப்பட்டதாகவும், மின்மாற்றியின் oil tank அவருடைய நிலத்தின் மதில் சுவர் கட்டும் பொழுது மேலே வரும் என கூறியதால் மின்மாற்றியினை அவருக்கு இடையூறு இல்லாதவாறு சற்று திருப்பி வைக்கப்பட்டதாகவும், மேலும் அவருடைய 09.03.2024 புகாரின் அடிப்படையில் மேலும் சிறிதளவு திருப்பி வைக்கப்பட்டு அவருக்கு எந்த இடையூறும் இல்லாதவாறு அமைக்கப்பட்டுள்ளதாகவும், மேலும் மூன்று பக்கம் முகப்பு உள்ளதை அவருடைய vacant இடத்தின் புகைப்படத்தில் தெரிய வருவதாக எதிர்மனுதாரர் தெரிவித்துள்ளார்.

6.5 20.01.2024 அன்று நடந்த மின்நுகர்வோர் குறைதீர்க்கும் மன்றத்தில் நடைபெற்ற கூட்டத்தில் கலந்துகொண்ட புகார்தாரரின் மனைவியிடம் தங்களின் குறைகள் நிவர்த்தி செய்யப்பட்டதா? என கேட்டதற்கு இடத்தினை பார்க்கவில்லை என்றும், தனது கணவர் வெளிநாட்டில் இருப்பதாக கூறியதாகவும், எனவே அவரிடம் இடத்தினை பார்த்துவிட்டு குறைகள் இருந்தாலோ அல்லது தங்கள் இடத்தின் எல்லையை நிர்ணயித்து விட்டு அலுவலகத்தில் தெரிவிக்குமாறு கூறப்பட்டதாகவும், அவரும் சரி என்றும் தனது கணவர்

வந்தபின் கூறுவதாக தெரிவித்ததாகவும், அன்னார் புகைப்பட ஆதாரங்கள் எதுவும் சமர்பிக்கவில்லை என்றும் எதிர்மனுதாரர் தெரிவித்துள்ளார்.

6.6 மின்மாற்றியின் ON/OFF Operating pipe புகார்தாரர் கட்டிவரும் மதில் சுவரை ஒட்டி வருவதால் அதனை மாற்றியமைக்கப்பட்டதாகவும், எனவே திரு.P. சாம் ஜெயசிங், அவர்கள் புகார் மனுவில் குறிப்பிட்டுள்ள குறைகளை நிரந்தரமாக நிவர்த்தி செய்யப்பட்டதாகவும், மேலும் மின்மாற்றி load centre–ல் நிறுவப்பட்டுள்ளதால் அதனை இடம் மாற்றிவைக்க தொழில் நுட்ப சாத்தியகூறுகள் இல்லை எனவும் எதிர்மனுதாரர் தெரிவித்துள்ளார்.

## 7.0 <u>மின் குறைதீர்ப்பாளரின் தீர்வு:</u>

7.1 மேற்கண்ட வழக்கில் தனது நிலத்தின் உட்பகுதியில் நிறுவப்பட்டுள்ள மின்மாற்றியை நிலத்திற்கு வெளியே இடமாற்றம் செய்யுமாறு மேல்முறையீட்டாளர் முறையிட்டுள்ளார். எனவே இருதரப்பு வாதங்கள் மற்றும் சமர்ப்பிக்கப்பட்ட ஆவணங்கள் ஆகியவற்றை ஆராய்ந்து பார்க்கும்பொழுது கீழ்க்கண்டவைகள் வழக்கெழு வினாக்களாக தெரிகின்றன.

1. மேல்முறையீட்டாளர் குறிப்பிட்டுள்ளது போல் உரிமதாரரால் நிறுவப்பட்ட மின்மாற்றி அவருடைய நிலத்தில் உள்ளதா?
2. பொது இடங்களில் மின்கம்பங்கள் / மின்மாற்றிகளை அமைக்க உரிமதாரருக்கு அதிகாரம் உள்ளதா?
3. தரைபகுதிக்கும் மின்பாதைக்கும் மற்றும் தரைபகுதிக்கும் மின்மாற்றிக்கும் இடையே உள்ள இடைவெளி குறித்து விதிமுறைகளில் கூறப்பட்டது யாது?
4. மின்மாற்றி கட்டமைப்பை வேறு இடத்திற்கு மாற்றி அமைப்பதற்கான சாத்திய கூறுகள் என்ன?

## 8.0 <u>வழக்கெழு வினா 1–ற்கான தீர்வு:</u>

8.1 மேல்முறையீட்டாளர் பார்வதிபுரம் கணேஷ் அவன்யூவில் புது சர்வே எண் A1/9–8C, A1/9–1F–இல் உள்ள வீட்டுமனை நிலத்திற்கு உள்ளே நிறுவப்பட்ட ஒரு மின்மாற்றி மற்றும் 10அடி இடைவெளி விட்டு மூன்று மின்கம்பங்கள் மற்றும் ஸ்டே கம்பியும் நிறுவப்பட்டுள்ளதாகவும், இந்த மின் மாற்றி நிறுவும் போது அனுமதியும் தகவல் எதுவும் தெரிவிக்கப்படவில்லை என்றும், இது அவருடைய குடும்பத்திற்கு ஈடுசெய்ய முடியாத

இழப்பாகவும், மன உளைச்சலாகவும் உள்ளது எனவும், எனவே அவருடைய நிலத்தின் எல்லைக்குள் நிறுவப்பட்ட மின்கம்பத்தையும் மின்மாற்றியையும் வேறு இடத்திற்கு மாற்றி தருமாறு மேல்முறையீட்டாளர் தெரிவித்துள்ளார்.

8.2 மின்மாற்றி மேற்கண்ட நிலத்தின் உள்ளே வராதவாறு மாற்றியமைக்கப்பட்டுள்ளதாக மன்ற ஆணையில் குறிப்பிட்டுள்ளதாகவும், மேற்கண்ட மின்மாற்றி, மேற்கண்ட நிலத்தின் உள்ளே வராதவாறு மாற்றியமைக்கப்பட்டுள்ளது என குறிக்கப்பட்டுள்ளது தவறு எனவும், மின் மாற்றி மாற்றியமைக்கப்படவில்லை எனவும், அதே இடத்தில் தான் உள்ளதாகவும், மின் மாற்றியில் சுமார் ஒரு அடி (One Foot) பகுதி தன் நிலத்தின் மேல் தான் உள்ளதாகவும், மின் மாற்றியை ON/OFF செய்யும் Lever–ம் தன் நிலத்தினுள் தான் உள்ளதாகவும், இது Compound சுவர் கட்டத் தடையாக உள்ளதாகவும், Compound சுவர் கட்டினால் பிறகு மின் மாற்றியை ON/OFF செய்ய முடியாது எனவும், எனவே தனது புகார் மனுவில் குறிப்பிட்டுள்ள குறைகளை நிரந்தரமாக நிவர்த்தி செய்து தருமாறு மேல்முறையீட்டாளர் கேட்டுக் கொண்டுள்ளார்.

8.3 எதிர்மனுதாரர் தனது வாதுரையில் மேல்முறையீட்டாளர் அளித்த புகார் மனுவில் குறிப்பிட்டுள்ள 25 KVA மின்மாற்றி single pole structure மின்கம்பம் சாலையின் ஓரத்தில் பொது இடத்தில் அன்னாருக்கோ மற்றும் பொதுமக்களுக்கோ இடையூறு இல்லாதவாறு காந்தி நகர் பகுதியில் உள்ள மின் குறைபாட்டினை சரிசெய்ய பொதுமக்களின் வேண்டுகோளுக்கிணங்க நிறுவப்பட்டதாகவும், மின்மாற்றி மற்றும் மின்கம்பங்கள் நிறுவும் பொழுது எந்த வித ஆட்சேபனையும் பெறப்படவில்லை என்றும், மேல்முறையீட்டாளர் மின்நுகர்வோர் குறைதீர்க்கும் மறைத்தில் அளித்த புகாரின் அடிப்படையில் கள ஆய்வு செய்யப்பட்டு அவருடைய இடத்தின் வெளியே சாலை ஓரத்தில் ஊன்றப்பட்ட மின்கம்பங்களை அன்னாருக்கு இடையூறு இல்லாதவாறு மாற்றி அமைக்கப்பட்டதாகவும், ஏற்கனவே அவருடைய நிலத்திற்கு வெளியே ஒரு LT stud pole பல வருடங்களுக்கு முன் நிறுவப்பட்டு இருந்தது மாற்றியமைக்கப்பட்டதாகவும், எதிர்மனுதாரர் தெரிவித்துள்ளார்.

8.4 புதிதாக நிறுவப்பட்ட மின்மாற்றியின் கொள்கலன் அவருடைய இடத்திற்கு உள்ளே வராதவாறு சற்று திருப்பி வைக்கப்பட்டதாகவும், மின்மாற்றியின் ON/OFF Operating pipe புகார்தாரர் கட்டிவரும் மதில் சுவரை ஒட்டி வருவதால் அதனை

மாற்றியமைக்கப்பட்டதாகவும், இந்த மின்மாற்றி ஏற்கனவே புகார்தாரரின் இடத்தின் அருகே தெற்கு பக்கமாக பயன்பாட்டிலிருந்த தாழ்வழுத்த மின்பாதையை உயர் அழுத்த மின்பாதையாக மாற்றி அதே சீரமைப்பு பாதையிலே நிறுவப்பட்டதாகவும், மின்மாற்றி மனுதாரரின் இடத்தின் உள்ளே அமைக்கப்படவில்லை என்றும், பொது பாதையில் சாலையின் அருகே அமைக்கப்பட்டுள்ளதாகவும், எனவே மேல்முறையீட்டாளர் புகார் மனுவில் குறிப்பிட்டுள்ள குறைகளை நிரந்தரமாக நிவர்த்தி செய்யப்பட்டதாகவும் எதிர்மனுதாரர் தெரிவித்துள்ளார்.

8.5 இருதரப்பு வாதங்கள் மற்றும் எதிர்மனுதாரரால் சமர்ப்பிக்கப்பட்ட ஆவணங்களையும் ஆராய்ந்ததில் மேற்படி மின்மாற்றி மற்றும் மின்கம்பம் புகார்தாரருக்கு உரிமைப்பட்ட நிலத்திற்குள் நிறுவப்படவில்லை என்பதும், மின்மாற்றி மற்றும் மின்கம்பம் நிறுவும் பொழுது மேல்முறையீட்டாளரின் நிலத்தின் எல்லை எதுவும் குறிப்பிடப்படவில்லை என்பதும் தெரிய வருகிறது. மேலும் மேல்முறையீட்டாளருக்கு சொந்தமான நிலத்தில் கட்டிடங்கள் ஏதுமின்றி காலி மனையாக இருப்பதும், நிறுவப்பட்ட மின்மாற்றி அவரது நிலத்தில் அமைக்கப்பட்டுள்ள சுற்றுசுவருக்கு வெளியே பொதுபாதையில் அமைக்கப்பட்டுள்ளதும் தெரிய வருகிறது. இதனை கேட்புரையின் போது மேல்முறையீட்டாளர் மறுதலிக்கவில்லை. ஆகவே, பொதுபாதையில் மின்மாற்றி மற்றும் மின்பாதை இருப்பது உறுதி செய்யப்படுகிறது.

## 9.0 <u>வழக்கெழு வினா 2-ற்கான தீர்வு:</u>

9.1 மேற்கூறிய வழக்கெழு வினா 1-இன் தீர்வின்படி உரிமதாரர் பொதுமக்களின் தேவையை பூர்த்தி செய்வதற்காக பொதுபாதையில் மின்மாற்றி நிறுவிய நிலையில் இது சம்பந்தமாக மின்கம்பம், மின்பாதை மற்றும் மின்மாற்றி போன்ற மின்தளவாடங்களை அமைக்கும் பணிகளை செய்வதற்கு மின் உற்பத்தி மற்றும் மின் பகிர்மான கழகத்திற்குள்ள அதிகார விதிமுறைகளை ஆராய விரும்புகிறேன். இந்திய மின்சார சட்டம், 1910, பிரிவு 51-இன்படி தந்தி தொலை தொடர்பு சட்டம் 1885-இல் கூறப்பட்டுள்ள அனைத்து அதிகாரங்களையும் மேற்கொண்டு மின்கம்பங்கள் மற்றும் மின்பாதை அமைப்பதற்கு தமிழ்நாடு மின்உற்பத்தி மற்றும் பகிர்மான கழகத்திற்கு அனுமதி வழங்கப்பட்டுள்ளது. அவ்விதி கீழே கொடுக்கப்பட்டுள்ளது.

***"51. Exercise in certain cases of powers of telegraph authority. –***

*Notwithstanding anything in Sections 12 to 16 (both inclusive) and Sections 18 and 19, the State Government may, by order in writing, for the placing of electric supply-lines, appliances and apparatus for the transmission of energy or for the purpose of telephonic or telegraphic communications necessaryfor the proper co-ordination of works, confer upon any public officer, licensee or any other person engaged in the business of supplying energy to the public under this Act, subject to such conditions and restrictions (if any) as the State Government may think fit to impose, and to the provisions of the Indian Telegraph Act, 1885 (13 of 1885), any of the powers which the telegraph-authority possesses under that Act, with respect to the placing of telegraph lines and posts for the purposes of a telegraph established or maintained by the Government or to be so established or maintained."*

9.2 மின்சார சட்டம் 1910, பிரிவு 51–இன்படி தந்தி தொலை தொடர்பு சட்டம் 1885–இல் கூறப்பட்டுள்ள அனைத்து அதிகாரங்களையும் மேற்கொண்டு மின்கம்பங்கள் மற்றும் மின்பாதை அமைப்பதற்கு உரிமதாரருக்கு வழங்கப்பட்ட உரிமைகளை ஆராய விரும்புகிறேன்.

***"Part III***
***Power to Place Telegraph Lines and Posts***
***10. Power for telegraph authority to place and maintain telegraph lines and posts:-***

*The telegraph authority may, from time to time, place and maintain a telegraph line under, over, along, or across, and posts in or upon any immovable property:*

*Provided that:-*

1. *The telegraph authority shall not exercise the powers conferred by this section except for the purposes of a telegraph established or maintained by the [Central Government], or to be so established or maintained.*
2. *The [Central Government] shall not acquire any right other than that of user only in the property under, over, along, across in or upon which the telegraph authority places any telegraph line or post; and*
3. *Except as hereinafter provided, the telegraph authority shall not exercise those powers in respect of any property vested in or under the control or management of any local authority, without the permission of that authority; and*
4. *In the exercise of the powers conferred by this section, the telegraph authority shall do as little damage as possible, and, when it has exercised those powers in respect of any property other than that referred to in clause (c), shall pay full compensation to all persons interested for any damage sustained by them by reason of the exercise of those powers. "*

**9.3** மேற்கண்டுள்ள இந்திய தொலைத்தொடர்பு சட்டம் 1885–இன் பிரிவு 10–இன்படி மின்கம்பமோ அல்லது மின்பாதையையோ எந்த ஒரு நிலத்திலும் அமைப்பதற்கு அதிகாரம் கொடுக்கப்பட்டுள்ளது. மேற்கூறிய விதிமுறைகளின்படி உரிமதாரர்

மின்பயன் பெற உரிமை கோரும் நுகர்வோருக்கு மின்பாதை அமைக்க உரிமையுள்ளது என தெரியவருகிறது.  ஆகவே, உரிமதாரர் பொதுபாதையில் நிறுவுதற்கு உரிமையுள்ளது என்பது உறுதி செய்யப்படுகிறது.

**10.0 <u>வழக்கெழு வினா 3–ற்கான தீர்வு:</u>**

10.1 தரைபகுதிக்கும் மின்பாதைக்கும் மற்றும் தரைபகுதிக்கும் மின்மாற்றிக்கும் உள்ள இடைவெளி குறித்த விதிமுறைகள் பற்றி அறிந்து கொள்ள நாம் CEA (measure relating to safety and electric supply) Regulations 2023 இன் 60 வது விதி, Schedule V மற்றும் Schedule VIII–ஐ ஆராய விரும்புகிறேன். அந்த விதி கீழே கொடுக்கப்பட்டுள்ளது.

***"60. Clearance in air of the lowest conductor of overhead lines. –***
*(1) The minimum clearance above ground and across road surface of National Highway or Expressway or State Highway or other road or highest traction conductor of railway corridor or navigational or non-navigational river of the lowest conductor of an alternating current overhead line, including service lines, of nominal voltage shall have the values specified in Schedule VIII A.*

***<u>Schedule VIII A</u>***

**Minimum clearance in air above ground and across road surface of Highways or roads or railway corridors or navigational or non-navigational rivers for lowest conductor of an alternating current overhead lines, including service lines of nominal voltage system.**

| *Nominal voltage of system* | *Clearance above ground* | | | *Clearance between conductor and road surface across Highway (m)* | *Clearance between conductor and rail level across Railway Corridor (m)* | | *Clearance above HFL for River crossing* | |
|---|---|---|---|---|---|---|---|---|
| | *Across Street (m)* | *Along Street (m)* | *Elsewhere (m)* | | *Normal OHE (where no double stack containers are to be run on railway tracks.)* | *High rise OHE for running of double stack containers on railway tracks.* | *Navigational river (m)* | *Non-navigational river (m)* |
| *Upto 650 V* | *5.80* | *5.50* | *4.60* | *U/G Cable* | *U/G Cable* | *U/G Cable* | *16.50* | *5.80* |
| *11 KV* | *6.50* | *5.80* | *4.60* | *U/G Cable* | *U/G Cable* | *U/G Cable* | *19.00* | *6.50* |
| *xxx* | | | | | | | | |

## *Schedule V*

***Minimum safety working clearances where electricity at voltage exceeding 650 V is supplied, converted, transformed or used***

*[See sub-regulation (2)(iii) of regulation (46)]*

| ***Highest System Voltage (kV)*** | ***Safety Woring Clearance (Metre)*** |
|---|---|
| ***12*** | ***2.6*** |
| ***36*** | ***2.8*** |
| ***72.5*** | ***3.1*** |
| ***145*** | ***3.7*** |
| ***245*** | ***4.3*** |
| ***420*** | ***6.4*** |
| ***800*** | ***10.3*** |

*(1) The above values are valid for altitude not exceeding 1000 m. A correction factor of 1.25 per cent per 100 m is to be applied for increasing the clearance for altitude more than 1000 m and up to 3000 m;*
*(2) The above safety working clearances are based on an insulation height of 2.44 m which is the height of lowest point on the insulator, where it meets the earthed metal, from the ground;*
*(3) "Safety Working Clearance" is the minimum clearance to be maintained in air between the live part of the equipment on one hand and earth or another piece of equipment or conductor on which it is necessary to carry out the work, on the other;*
*(4) The "Highest System Voltage" is defined as the highest rms phase to phase voltage which occurs under normal operating conditions at any time and at any point of the system. It excludes voltage transients (such as those due to system switching) and temporary voltage variations due to abnormal system conditions (such as those due to fault conditions or the sudden disconnection of large loads)."*

10.2 மேற்கண்ட விதிகளை கூர்ந்து படிக்கும் பொழுது நாம் அறிவது என்னவென்றால் தரைபகுதிக்கும் நிறுவப்பட்ட மின்பாதைக்கும் இடையே உள்ள செங்குத்து இடைவெளி (Vertical distance) 650V வரை 5.50 metres இருக்க வேண்டும் என்றும், 650V மேல் 11000V வரை 5.8 meters இருக்க வேண்டும் என்றும், தரைபகுதிக்கும் நிறுவப்பட்ட மின்மாற்றி கட்டமைப்புக்கும் இடையே உள்ள அனுமதிக்கப்பட்ட பாதுகாப்பு இடைவெளி தூரம் (*Safety Working Clearance*), அதாவது மின்னூட்டம் இருக்கும் பகுதிக்கும் தரைபகுதிக்கும் (*the minimum clearance to be maintained in air between the live part of the equipment on one hand and earth*) 2.6 metres இருக்க வேண்டும் என்றும் தெரியவருகிறது. எதிர்மனுதாரர் சமர்ப்பித்த ஆவணங்களின் வாயிலாக தரைபகுதிக்கும் மின்னூட்டம் உள்ள மின்மாற்றி கட்டமைப்புக்கும் இடையே உள்ள இடைவெளி 3.7 metres இருப்பதும் மற்றும்

அமைக்கப்பட்ட மின்பாதைக்கும் தரைபகுதிக்கும் இடையே உள்ள இடைவெளி 9.0 metres இருப்பதும் தெரியவருகிறது. இது பாதுகாப்பு விதியில் கூறப்பட்ட இடைவெளியை விட அதிகமாக உள்ளது.

10.3 மேலும் இந்த மின்மாற்றி பொதுமக்களின் பயன்பாட்டுக்காக மின்பளு மையத்தில் (load centre)–இல் நிறுவப்பட்டுள்ளதால் அதனை இடம் மாற்றிவைக்க தேவையில்லை என்ற எதிர்மனுதாரரின் வாதம் ஏற்றுக் கொள்ளப்படுகிறது. எனவே, பொது இடத்தில் பொதுமக்களின் நலனுக்காக யாருக்கும் எவ்வித இடையூறுமின்றி பாதுகாப்பு இடைவெளியுடன் நிறுவப்பட்ட மின்மாற்றியை மாற்றி அமைக்கக் கோரும் மேல்முறையீட்டாளரின் கோரிக்கை நிராகரிக்கப்படுகிறது.

**11.0 <u>வழக்கெழு வினா 4–ற்கான தீர்வு:</u>**

11.1 மின்தொடர் கட்டமைப்பு மற்றும் சாதனங்கள் இடமாற்ற கோரும் மேல்முறையீட்டாளரின் முறையீடு சம்பந்தமாக தமிழ்நாடு மின் வழங்கல் விதிகளின் விதி எண்.5(6)–ஐ ஆராய விரும்புகிறேன். அந்த விதி கீழே கொடுக்கப்பட்டுள்ளது.

***"5. பல்வகைக் கட்டணங்கள்***
***xxx***
***xxx***

***6. மின்இணைப்பு/மின்தொடர், கட்டமைப்பு மற்றும் சாதனங்கள் மாற்றல் கட்டணம்:***
*(1) மின்னிணைப்பு / மின்தொடர், கட்டமைப்பு மற்றும் சாதனங்கள் இடமாற்றுவதற்கான கட்டணத்தை நுகர்வோரே ஏற்க வேண்டும். மதிப்பீடு செய்யப்பட்ட இடமாற்றத் தொகையை நுகர்வோர் முழுமையாக முன் கூட்டியே கட்டிவிட வேண்டும். மதிப்பீட்டின் நகல் நுகர்வோருக்கு வழங்க வேண்டும். அத்தொகை செலுத்தப்பட்ட பின்னரே இடமாற்ற பணி மேற்கொள்ளப்படும். "*

11.2 மேற்கண்ட விதி 5(6)ஐ கூர்ந்து பார்க்கும்பொழுது மின் இணைப்பு/மின்தொடர், கட்டமைப்பு மற்றும் சாதனங்கள் இடமாற்றுவதற்கான கட்டணத்தை நுகர்வோரே ஏற்க வேண்டும் எனவும், மதிப்பீடு செய்யப்பட்ட இடமாற்றத் தொகையை நுகர்வோர் முழுமையாக முன் கூட்டியே செலுத்திவிட வேண்டும் எனவும், மதிப்பீட்டின் நகல் நுகர்வோருக்கு வழங்கப்பட வேண்டுமெனவும், அத்தொகை கட்டப்பட்ட பிறகே இடமாற்றப்பணி தொடங்கப்படும் எனவும் அறியப்படுகிறது. இவ்வழக்கில்

மேல்முறையீட்டாளர் இடமாற்றம் கோரும் மின்மாற்றியானது அவருக்கு சொந்தமான காலி நிலத்தில் நிறுவப்படவில்லை எனவும், பொதுபாதையில் உரிய பாதுகாப்பு இடைவெளியுடன் நிறுவப்பட்டுள்ளதும் தெரியவருகிறது. எனவே, மேல்முறையீட்டாளர் பொதுபாதையில் பாதுகாப்புடன் நிறுவப்பட்ட மின்மாற்றி இருந்த நிலையில் கேட்புரையின் போது மாற்று இடத்தில் உரிமதாரர் செலவில் இடமாற்றம் செய்யக் கோரும் மேல்முறையீட்டாளரின் கோரிக்கை ஏற்புடையதாக இல்லை. மேலும், மேல்முறையீட்டாளர் அம்மின்மாற்றியை மாற்ற விரும்பினால் தொழில்நுட்ப சாத்திய கூறுகளின் அடிப்படையில் முடிவெடுக்க எதிர்மனுதாரருக்கு அறிவுறுத்தப்படுகிறது.

12.0 முடிவுரை:

12.1 மேற்கூறிய பத்திகளில் உள்ள தீர்வின்படி, மேல்முறையீட்டாளரின் காலி நிலத்திற்கு வெளியே பொதுபாதையில் நிறுவப்பட்ட மின்மாற்றி மற்றும் மின்பாதை பாதுகாப்பு சேமவிதிமுறைகளின்படி போதிய இடைவெளியுடன் இருப்பது தெரியவருவதால், மேல்முறையீட்டாளரின் கோரிக்கையான மின்மாற்றி மற்றும் மின்பாதையை மாற்றம் செய்யும் முறையீடு நிராகரிக்கப்படுகிறது.

12.2 மேற்கண்ட தீர்வுடன் இந்த மேல்முறையீட்டு மனு எண் 22/2024 முடிவுக்கு கொண்டு வரப்படுகிறது. செலவுத் தொகை இல்லை.

(ந. கண்ணன்)
மின்குறைதீர்ப்பாளர்

''நுகர்வோர் இல்லையேல், நிறுவனம் இல்லை''
**"No Consumer, No Utility"**

பெறுநர்

1. திரு P. சாம் ஜெய சிங், – By RPAD
63E/3A1, பெருமாள் நகர், A.R.P. கேம்ப் ரோடு,
பட்டகசாலியன்விளை, நாகர்கோவில் – 629 002,
கன்னியாகுமரி மாவட்டம்.

2. உதவி மின்பொறியாளர்/ பார்வதிபுரம்,
கன்னியாகுமரி மின் பகிர்மான வட்டம்,
தமிழ்நாடு மின் உற்பத்தி மற்றும் பகிர்மான கழகம்,
துணை மின் வளாகம், பார்வதிபுரம், நாகர்கோவில் – 629 003.

3.  செயற்பொறியாளர்/ விநியோகம் / நாகர்கோவில்,
கன்னியாகுமரி மின் பகிர்மான வட்டம்,
தமிழ்நாடு மின் உற்பத்தி மற்றும் பகிர்மான கழகம்,
பார்வதிபுரம், நாகர்கோவில் – 629 003.

4.  மேற்பார்வை பொறியாளர், – By Email
**கன்னியாகுமரி** மின் பகிர்மான வட்டம்,
தமிழ்நாடு மின் உற்பத்தி மற்றும் பகிர்மான கழகம்,
பார்வதிபுரம், நாகர்கோவில் – **629 003.**

5. தலைவர் மற்றும் நிர்வாக இயக்குநர், – By Email
தமிழ்நாடு மின் உற்பத்தி மற்றும் பகிர்மான கழகம்,
நடிப்பிசைப் புலவர் கே.ஆர். ராமசாமி மாளிகை,
144, அண்ணாசாலை, சென்னை – 600 002.

6.  செயலாளர், – By Email
தமிழ்நாடு மின்சார ஒழுங்குமுறை ஆணையம்,
4வது தளம், சிட்கோ தலைமை நிர்வாக அலுவலக கட்டிடம்,
திரு.வி.க. தொழிற்பேட்டை, கிண்டி, சென்னை – 600 032.

7.  உதவி இயக்குநர் (கணினி) – **தமிழ்நாடு மின்சார ஒழுங்குமுறை ஆணையம் இணையதளத்தில் வெளியிடுவதற்காக**
தமிழ்நாடு மின்சார ஒழுங்குமுறை ஆணையம்,
சிட்கோ தலைமை நிர்வாக அலுவலக கட்டிடம்,
திரு.வி.க. தொழிற்பேட்டை,
கிண்டி, சென்னை – 600 032.